# NFTE- BSNL TamilNadu Circle

## ஆகஸ்ட் 20 இளைஞர் மாநாடு, காரைக்குடி- தீர்மானங்கள்

### TTA தேர்வு

2004க்குரிய Supplementary தேர்வில் தமிழகத்தில் 90க்கும் மேற்பட்ட TM தோழர்கள் வெற்றி பெற்றும் அவர்களால் TTA ஆக முடியாத சூழல் நீதிமன்ற தீர்ப்பால் நிலவுகிறது. சென்னை உயர்நீதிமன்றம் RR பிரச்சனையை எழுப்பியதால் தமிழக தோழர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். உச்சநீதிமன்றமும் வழக்கை அனுமதித்து நியாயம் வழங்கும் நிலை தென்படவில்லை.

ஒரேவகை தேர்வு எழுதிய பிறமாநிலத்தவர் TTA ஆகி ஆண்டு உயர்வு தொகைகளும் பெற்ற நிலையில் தமிழக தோழர்கள் posts இருந்தும் இவ்வழக்கால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். எனவே RR யை பொருத்தமாக்கியோ அல்லது வேறு நிர்வாக நடவடிக்கைளின் மூலமோ அந்த தோழர்களின் பதவி உயர்விற்கு உதவிட மாநில மற்றும் கார்ப்பரேட் நிர்வாகத்தை இம்மாநாடு கோருகிறது.

### கேடர்கள் பெயர் மாற்றம்

கேடர்கள் பெயரை காலத்திற்கும் போட்டி சூழலுக்கும் உகந்தாற்போல மாற்றிட இளைஞர்களின் மாநாடு வற்புறுத்துகிறது. IT, VAS மற்றும் Sales AND Marketing செயல்பாடுகள் அதிகரித்த நிலையை கவனத்தில் கொண்டு பெயர் மாற்றத்தை கொணரவேண்டும். வாடிக்கையாளரை சந்திக்கும்,புதிய புதிய தொழில்நுட்பத்தை கையாளும், மார்கெட்டிங் செய்திடும் ஊழியர்கள் சமுக மரியாதை பெறும் அளவிற்கு அப்பெயர் பொருத்தமாக அமைந்திடவேண்டும் என மாநாடு கோருகிறது.

## DOT ல் தேர்வானவர்

DOT ஆக இருந்த காலத்தில் தேர்வானவர்களில் சிலர் (Recruit) BSNL உருவானதற்கு பின்னர் பதவிகளில் அமர்த்தப்பட்டனர். பரிவு அடிப்படை, தேர்வின் மூலம் என பல முறைகளில் அவர்கள் தேர்வு நடந்திருக்கலாம். அவ்வூழியர்களை DOTல் இருந்து வந்தவர்களாகவே கருத வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகிறது. தொடர்ந்து இப்பிரச்சனையில் கவனம் செலுத்த தலைமையை மநாடு வேண்டுகிறது.

## TTA தோழர்கள்

TTA தோழர்கள் JTO பதவி தகுதிகாலம், 2007க்குப்பின்னர் வந்த தோழர்களின் புதிய ஊதிய 30 சத நிர்ணய பிரச்சனை ஆகியவற்றில் NFTE மற்றும் SNATTA சங்கங்கள் எடுத்துவரும் நடவடிக்கைகளை மாநாடு வரவேற்கிறது. விரைவில் JTO தேர்வையையும், ஊதிய பிரச்சனையும் தீர்த்திட மாநாடு கோருகிறது.

## EPF

EPF Annual Statement குறித்த காலத்தில் அனவருக்கும் கிடைக்க செய்திட மாநில நிர்வாகம் நடவடிக்கை எடுத்திடவேண்டும். EPF குறித்த விழிப்புணர்வு கருத்தரங்களை திருச்சி, மதுரை, கோவை, சென்னை போன்ற மண்டலங்களில் நமது ஊழியர்களுக்கு EPF அலுவலர்களை கொண்டு நடத்திட மாநில நிர்வாகத்தை மாநாடு வேண்டுகிறது.

## ஓய்வூதியம்

ராவ் கமிட்டி அதிகாரிகளுக்கு Superannuation Benefit குறித்த பரிந்துரையை தந்துள்ளது. அப்பரிந்துரையும் DPE வழிகாட்டுதலாக வந்துள்ளது. தற்போதுள்ள EPS 1995, 30% Superannuation benefit as per DPE, CGS Pension, New Pension என பல திட்டங்களை Study செய்து BSNLன் Non-Executive ஊழியர்களுக்கு உகந்த ஓய்வூதிய பலன்களை பரிந்துரை செய்திட ஊழியர் அதிகாரிகளை கொண்ட இரு தரப்பு கமிட்டி ஒன்றை BSNL நிர்வாகம் அமைக்க வேண்டும் என இளைஞர் மாநாடு கோருகிறது.

## Child Care Leave

ஆறாவது ஊதியக்குழுவின் Child Care Leave பரிந்துரை மத்திய அரசு ஊழியர்களுக்கு அமுலாகி வருகிறது. BSNL லிலும் பிற பொதுத்துறைகளை காட்டி மறுத்திடாது அவ்விதிகளை கால தாமதமின்றி அமுல்படுத்திட மாநாடு கோருகிறது.

## போனஸ்

1978 சரண்சிங் காலந்தொட்டு 32 ஆண்டுகளாக பெற்ற போனஸ் கடந்த ஆண்டு BSNLல் நட்டம் என்ற பெயரில் இல்லாமல் செய்யப்பட்டது. BSNLEU அங்கீகரிக்கப்பட்ட சங்கம் DOTன் MOU Ratingல் திருத்தத்தை கொண்டு வராததால் போனஸ் சென்ற ஆண்டு பறிபோனது. லாபம் வராவிட்டாலும் பிற மத்திய அரசு ஊழியர்களுக்கு தரப்படுவது போல் குறைந்தபட்ச போனஸ் என்பது ஏற்கப்பட்டு இவ்வாண்டு போனஸ் தரப்படவேண்டும் என மாநாடு வற்புறுத்துகிறது.

## ஊழியர் அளவீடுகள்

கார்ப்பரேட் நிர்வாகம் தொழிற்சங்கங்களை கலக்காமல் ஊழியர் அளவீடுகளை அவ்வப்போது வெளியிடுவதும் தொடர்ந்து அளவீடுகளை இறுக்கமாக்குவதும் நடந்து வருகிறது. ஊழியர்கள் பெருமளவு உபரி என காட்டுவதற்கான ஏற்பாடாகவே இதை நாம் கருத வேண்டியுள்ளது. எனவே தொழிற்சங்கங்களை கலந்து ஆலோசிக்காமல் எந்த புதிய அளவீடுகளும் நடைமுறை படுத்தப்படக்கூடாது என இம்மாநாடு கோருகிறது.

## மோடம்

மோடம் வழங்குவதில் சுணக்கம் ஏற்பட்டு பிரான்சைசிகள் மூலம் வாடிக்கயாளர் மோடம் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது. நமது வர்த்தக மற்றும் வருவாய் நலனுக்கு உகந்த முடிவாக இவ்வகை நடைமுறை அமையாது என மாநாடு கருதுகிறது. எனவே தங்கு தடையின்றி நிர்வாகமே

வாடிக்கையாளர்களுக்கு மோடம் வழங்கும் நடைமுறை தொடர வேண்டும் என மாநாடு வற்புறுத்துகிறது.

## NEPP பாரபட்சம்

DOTயிலிருந்து வந்தவர்களுக்கும் BSNL நேரிடை ஊழியர்களுக்கும் பதவி உயர்வு பெறுவதற்குரிய தகுதிகாலம் பாரபட்சமாக வைக்கப்பட்டுள்ளது. DOTயிலிருந்து வந்தவர்களைப் போலவே BSNL நேரிடை ஊழியர்களுக்கும் பதவி உயர்வு வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும் என மாநாடு கோருகிறது.

## GPF பட்டுவாடா

GPF பட்டுவாடாவில் கடந்த சில மாதங்களாக நெருக்கடி ஏற்பட்டு ஊழியர்கள் பாதிப்புக்கு உள்லாகி வருகின்றனர். ஊழியர்களுக்கு பணத் தேவையளவிற்கு காலத்தில் பட்டுவாடா நடப்பதில்லை. DOT-BSNL நடைமுறை சிக்கல் என்றும், BSNLல் பணப்புழக்க தட்டுப்பாடும் காரணம் என்றும் சொல்லப்படுகிறது. காரணம் எவையாக இருப்பினும் ஊழியர் பாதிப்புக்கு உள்ளாவதை அனுமதிக்கமுடியாது. ஆகையால் தங்கு தடையற்ற GPF பட்டுவாடாவிற்கு மாநில நிர்வாகம் உத்தரவாதம் செய்திட மாநாடு கோருகிறது.